2005 ஏப்ரல் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 264, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

264—

நியாயவிலைக் கடை

***9746—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், கேத்துநாய்க்கன்பட்டியில் நியாயவிலைக் கடைக்குக் கட்டடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், கேத்துநாய்க்கன்பட்டி நியாயவிலைக் கடை 154 குடும்ப அட்டைகளுடன் முழுநேர நியாயவிலைக் கடையாகச் செயல்படுகிறது. இந்த நியாயவிலைக் கடைக்குக் கட்டடம் கட்டுவதற்கு தற்போதைய அரசின் திட்டங்களில் வழிவகை செய்யப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 265, திரு. லா. சந்தானம், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

265—

நியாயவிலைக் கடை

***22170—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியம், அல்லிகுண்டம் ஊராட்சி, அல்லிகுண்டம் நியாயவிலைக் கடைக்குக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி வட்டம், அல்லிகுண்டம் நியாயவிலைக் கடைக்குக் கட்டடம் கட்டப்பட்டு நவம்பர் 2004 முதல் செயல்பட்டு வருகிறது என்ற மகிழ்ச்சியான செய்தியைச் சொல்லி அமர்கின்றேன்.*

திரு. லா. சந்தானம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அதற்கு முன்னால் தொடுக்கப்பட்ட கேள்வி. கட்டப்பட்டிருக்கிறது என்கின்ற செய்தி எனக்கும் தெரியும். அமைச்சர் அவர்களுக்கு நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 266; திரு. எஸ். நடராஜன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.*

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

266—

கோயில் பூஜை

***44845—திரு. எஸ். நடராஜன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், நத்தம் ஊராட்சியில் அறநிலையத் துறையின் பராமரிப்பிலுள்ள ஈஸ்வரன் கோயிலில் தினந்தோறும் பூஜைகள் நடைபெற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், நத்தம் கிராமம் அருள்மிகு ஈஸ்வரன் திருக்கோயிலுக்கு நிலக் குத்தகை மற்றும் மரம் மேல் மகசூல் குத்தகை மூலம் வருமானம் கிடைக்கப்பெறுகிறது. இந்த வருமானத்திலிருந்து திருக்கோயில் பணியாளர் சம்பளம், மின்சாரக் கட்டணம், தீப எண்ணெய் ஆகிய செலவுகளுடன் திருக்கோயில் தினசரி பூஜைகள் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்படி திருக்கோயிலுக்கு ஒரு கால பூஜைத் திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். அதே நேரத்தில், வேலூர் மாவட்டம்,*